முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் கார்த்திகை மாதம் 5ம் திகதி முதல் கார்த்திகை மாதம் 12ம் திகதி வரை**

**(21.11.2021 ஞாயிறு முதல் 28.11.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அறமாக வந்த ஆறுமுக அரங்கனே
   அகத்தியனும் வார ஆசி தன்னை
   வரமாக அரங்கன் நீ கேட்க
   வழங்குவேன் இந்தியா தமிழகம் தன்னில்
2. தன்னிலே பிலவதேள் திங்களில்
   தக்க பஞ்சதிகதி மேல் வியதிகதி வரை
   இந்நாளில் நடக்கும் நிகழ்வாக
   எதிர்கால பலன்குறித்த ஆசிதனை உரைப்பேன்
3. உரைக்கவே இந்தியா தமிழகத்தில்
   உயர்வான நீர்வளமாக மழைதானும்
   பெருகியே இயற்கை சீற்றங்களும்
   புயலாக அணுகி அழிவு காட்டும்
4. காட்டுமே கடலோர மக்களுக்கு எல்லாம்
   கவலையும் கண்ணீருமே மிஞ்சும்
   வாட்டமுற வாழ்வாதார பின்னடைவும்
   வரிச்சுமை விலைவாசி ஏற்றம் என மிகுந்து
5. மிகுந்துமே அரசுக்கும் மக்களுக்கும்
   மேன்மையில்லா நம்பகமில்லா நிலை காட்டும்
   தகுந்த ஞானவான்கள் தலைமையில்லா
   தமிழகம் இந்தியா பொருளாதார வகை
6. வகைதனில் பின்னடைவும் சரிவும்
   வளர்ச்சி காணா முடைகள் காணும்
   பகைமையும் அதிகார வர்க்கங்களின் பதவியும்
   பணக்குறி வழியான செயல்பாடுகளும்
7. செயல்பாடுகளும் துறைவாரியான வளர்ச்சிக்கு
   செயல்படா முடங்கி இடர்கள் காணும்
   தயவிலா இந்தநிலைகள் அகல
   தமிழகம் இந்தியா தலைநிமிர
8. நிமிரவே அரங்க ஞானி காட்டும்
   நிலவுலகில் ஆறுமுகன் வழிபாட்டை
   நேமமாக தர்மமாக ஏற்று வர
   நிகழ்த்திடுவேன் ஞானவான் தலைமைகளாகி

9. ஆகியே மாற்றம்தனை கண்டு
ஆறுமுகனார் வழிபாடாக பெருகி
அகிலத்தில் இந்தியா தமிழகத்தில் துவங்கி
ஆன்மீக ஞானதலைமை கொண்டு

10. கொண்டுமே ஞானிகள் ஆட்சியாகவும்
குறையில்லா ஞானஆட்சியாகவும் மாறும்
தொண்டுவழி உலகமக்கள் தேசிகனை தொடர்ந்து
தொண்டர்கள் ஆகிவர இந்தியா தமிழகம் நல்பாதுகாப்பு பெறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 5ம் நாள் 21.11.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் கார்த்திகை மாதம் 12ம் நாள் 28.11.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

இவ்வுலகை காத்திடவே அறத்தின் சாட்சியாக அறசக்தி வடிவமாக முருகப்பெருமானின் அம்சமாக அவதரித்த ஆறுமுக அரங்க மகானே தாம் அகத்தியர் எம்மிடம் கேட்க இந்தியா தமிழகத்தில் பிலவ வருடம் கார்த்திகை மாதம் 5ம் நாள் 21.11.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் கார்த்திகை மாதம் 12ம் நாள் 28.11.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்தியா தமிழகத்தில் தற்சமயம் இயற்கையும் மழையாக பெருமளவில் பெய்து இயற்கை சீற்றங்களாக மாறியே புயலாகவும், வெள்ளப்பெருக்காகவும் மாறியே அழிவை உண்டாக்குவதோடு மக்களை துன்பத்தில் ஆழ்த்துமப்பா. கடற்கரை சார்ந்த பகுதி மக்களுக்கு இந்த மழை பொழிவானது துன்பத்தை தந்துமே மக்களை கண்ணீரில் ஆழ்த்துமப்பா. மக்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்கு உள்ளாகி மக்கள் அல்லல்படுவார்கள். அரசு இழப்புகளை சரி செய்ய மேலும் வரிவிதிப்பை மக்கள் மீது திணிப்பதால் விலைவாசி ஏற்றம் அடையும்.

அரசின் இத்தகைய செயல்பாட்டினால் அரசும் மக்களும் பின்னடைவை சந்திப்பதோடு அரசின் மீது மக்களுக்கு நம்பகம் இல்லாத சூழல் உருவாகுமப்பா.

தகுந்த ஆலோசனைகள் இல்லாததாலும், ஞானவான்களின் தலைமையோ, துணையோ இல்லாத சூழ்நிலையில் தமிழகம் இந்தியா பொருளாதார வகையிலே பின்னடைவை சந்தித்து பொருளாதாரம் முடக்கமாகும். அதுமட்டும் இல்லாமல் ஒருவருக்கு ஒருவர் பகை அதிகரிப்பதுடன், அதிகாரத்தில் உள்ளோர் பதவிகளின் பொருளாதாரத்தின் மூலமான செயல்பாடுகளும், பணபரிவர்த்தனைகளை கையாளும் துறைகளும் முடங்கி எல்லா துறைகளிலும் முடக்கம் உண்டாகும்.

துன்பமயமான கருணையற்ற இந்தவிதமான சூழல்கள் எல்லாம் மாற்றம் அடைந்து இந்தியா தமிழகம் தலைநிமிர்ந்து முன்னேற வேண்டுமாயின் தர்மத்தின் நெறியை போதிக்கும் ஆறுமுக அரங்க மகா தேசிகனார் கூறும் முருகப்பெருமான் வழிபாட்டினை அனைவரும் ஏற்று வழிபடுவதுடன் அவரவரும் இயன்ற அளவு தர்மங்களை செய்து வர வர அவர்களுக்கு ஞானம் உண்டாகி அவர்கள் ஞானத் தலைமைகளாகிவிடுவர். உலகினில் முருகப்பெருமான் வழிபாடு

பெருகி முருகப்பெருமானின் தலைமையில் ஞான ஆட்சியானது இந்தியா தமிழகத்தில் துவங்கி ஆன்மீக ஞானத் தலைமையை அடைந்து ஆட்சியானது ஞான ஆட்சியாகவும் ஞானிகள் ஆட்சியாகவும் மாறிடும். உலக மக்கள் அரங்க மகானின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு அரங்கரின் தொண்டர்களாகி தொண்டுகள் செய்து வரவர இந்தியா தமிழகம் முழுமையான பாதுகாப்பை பெற்றிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–